பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
07 01 2025 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. தலைநகர் தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
2. எதிர்கால இந்தியாவை உருவாக்குவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
3. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இ-ஷ்ரம் இணையதளத்தை 22 அங்கீகரிக்கப்பட்ட மொழிகளிலும் பயன்படுத்துவதற்கான வசதியை மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று தொடங்கி வைத்தார்.
4. நெடுஞ்சாலை துறையின் வளர்ச்சித்திட்டங்கள் குறித்து மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி இன்று மாநில அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்.
5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஒடிசா அணி – பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

தலைநகர் தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், தேர்தலுக்கான அறிவிக்கை இம்மாதம் பத்தாம் தேதி வெளியிடப்பட்டு வேட்புமனு தாக்கல் தொடங்கும் என்று கூறினார்.

வேட்புமனுக்களை இம்மாதம் 17-ஆம் தேதி வரை தாக்கல் செய்யலாம்.

70 தொகுதிகள் கொண்ட தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு 13 ஆயிரத்து 33 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒரு கோடியே 55 லட்சம் வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி மற்றும் உத்திரபிரதேசத்தில் மில்கிபூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கும் இரண்டு இடைத்தேர்தல் இதே அட்டவணைப்படி நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையர் கூறினார்.
தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் எட்டாம் தேதி எண்ணப்படும் என்றும் திரு ராஜீவ்குமார் அறிவித்தார்.

**[]<<<>>>[]**

தனிநபர் மின்னணு தகவல் பாதுகாப்புக்கான வரைவு விதிமுறைகள் மக்கள் சார்ந்த அரசு நிர்வாகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இந்த புதிய விதிமுறைகள் தொடர்பாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் அளித்த சமூவ வலைதளப் பதிவுக்கு பதில் தெரிவித்துள்ள பிரதமர், நாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு தனிப்பட்ட நபர்களின் மின்னணு தகவல் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் கொண்டு வந்துள்ள புதிய விதிமுறைகள் ஆக்கப்பூர்வமான பலன்களை அளிக்கும் என்ற அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வரைவு விதிமுறைகள் தொடர்பாக அனைத்து தரப்பினரிடமும் கருத்துக்களைப் பெறுவதற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

**mygov** தளத்தில் இம்மாதம் 18-ஆம் தேதி வரை தனிநபர் மின்னணு தகவல்கள் பாதுகாப்பு விதிமுறைகள் குறித்த கருத்துக்களை பதிவிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

எதிர்கால இந்தியாவை உருவாக்குவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் ஆக்ராவில் பள்ளி ஆசிரியர்கள் சங்க மாநாட்டில் உரையாற்றிய அவர், வருங்கால சந்ததியினருக்கு ஆசிரியர்கள் தோள்கொடுத்து உதவி வருவதாகக் கூறினார்.

மாணவர்களின் திறனை மேம்படுத்தி அவர்களுக்கான சரியான பாதையை அமைத்துத் தருவதில் ஆசிரியர்கள் சிறப்பாக கடமையாற்றி வருவதாகவும் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசு கொண்டு வந்துள்ள மூன்று புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்களும், பாரத்போல் இணையதளமும் குற்றவாளிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்கும் வலுவான கட்டமைப்பை உருவாக்கித் தந்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பாரத்போல் இணையதள கட்டமைப்பை தொடங்கி வைத்து பேசிய அவர், சர்வதேச புலனாய்வு அமைப்பான இன்டர்போல் மற்றும் 195 நாடுகளில் புலனாய்வு அமைப்புகளுடன் பாரத்போல் இணையதளம் இணைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்திய சட்டங்கள் அளிக்கும் தண்டனையிலிருந்து தப்பிக்க வெளிநாடுகளுக்குச் செல்லும் குற்றவாளிகள் தீவிர கண்காணிப்பு கட்டமைப்பின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்,

நவீன தொழில்நுட்பத்துடள் உருவாக்கப்பட்டுள்ள பாரத்போல் இணையதளம் நீதியை முழுமையாக நிலைநாட்டுவற்கு வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச அளவிலான குற்றவாளிகளுக்கு இன்டர்போல் வழங்கியுள்ள நோட்டீஸ்கள், தகவல்கள் உள்ளிட்டவை இந்தியாவின் புலனாய்வு அமைப்புகளுக்கு பெரிதும் உதவிடும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த தகவல்கள் உடனுக்குடன் பகிரப்படுவதால். குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கான வாய்ப்பு முற்றிலும் தடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல், ஆயுத கடத்தல் மற்றும் சட்டவிரோ குடியேற்றம் ஆகியவற்றை தடுப்பதிலும் பாரத்போல் தகவல் கட்டமைப்பு முக்கிய பங்காற்றும் என்றும் திரு அமித்ஷா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நெடுஞ்சாலைத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் போக்குவரத்துத்துறை அமைச்சர்களுடன் இன்று புதுதில்லியல் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்திற்குப் பின் திரு நிதின்கட்கரி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் மாநில அமைச்சர்களுடன் ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த ஆய்வுக் கூட்டம்

நெடுஞ்சாலை திட்டங்களை மேம்படுத்துவதற்கும், புதிய திட்டங்களை கொண்டு வருவதற்கும், கொள்கைகளை வகுப்பதற்கும் சிறந்த வாய்ப்பாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலை திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெடுஞ்சாலை கட்டமைப்பு மற்றும் போக்குவரத்தில் மாநிலங்கள் சந்திக்கும் சவால்கள் குறித்தும், அதற்கான தீர்வை கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆண்டு கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுவதாகவும் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் கடந்த பத்து ஆண்டுகளில் 18 கோடியே 30 லட்சம் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள 2024-ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கையில், சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதில் 100 சதவீதத்துக்கும் கூடுதலான வளர்ச்சியை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இ-ஷ்ரம் இணையதளத்தில் தினமும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பதிவு செய்து வருவதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இ-ஷ்ரம் இணையதளத்தை 22 அங்கீகரிக்கப்பட்ட மொழிகளிலும் பயன்படுத்துவதற்கான வசதியை தொடங்கி வைத்து பேசிய அவர், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான கொள்கைகளை வகுப்பதற்கும், புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்கும் இந்த இணையதளம் பேருதவியாக இருக்கும் என்று கூறினார்.

அரசின் நலத் திட்டங்களை உரிய நேரத்தில் தொழிலாளர்கள் பெற்று பயன்பெறுவதற்கும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இந்த இணையதளம் உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது இந்த இணையதளத்தில் மத்திய அரசின் 12 முக்கிய திட்டங்களில் பயன்பெறுவதற்கான சேவை தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இந்தியாவும் - மலேசியாவும் தீவிரவாதம் ஒழிப்பு, இணையவழி மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என முடிவு செய்துள்ளன.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற இரு நாடுகளுக்கும் இடையோன முதலாவது பாதுகாப்புசார் பேச்சுவார்த்தையில் இந்தியாவின் சார்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலும், மலேசியா சார்பில் அந்நாட்டு தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தலைமை இயக்குநர் திரு ராஜா டத்தோ நுசிர்வான் பங்கேற்றனர்.

இணைய பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

முக்கிய கனிமங்கள் மற்றும் பூமியில் அரிதாக கிடைக்கப்பெறும் கனிமத் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இந்த கூட்டதில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வருடாந்திர கூட்டங்களை நடத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஒடிசா அணி – பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.
இப்போட்டி இரவு மணி 8.15-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்த இணை தாய்லாந்தின் **Thantub – Pawit sornlaksup** இணையை 7-6, 6-4 என்ற செட் கணக்கில் வென்றது.

**[]<<<>>>[]**

லக்னோவில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஜூனியர் **Handball** சாம்பியன் போட்டியின் இறுதி ஆட்டத்தில் உஸ்பெக்கிஸ்தான் பட்டத்தை வென்றது.

**[]<<<>>>[]**

இந்திய தடகள கூட்டமைப்பின் புதிய தலைவராக குண்டு எறிதல் வீரர் பகதூர் சிங் சாஹூ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**End of News**